நல்லூர் கிளை நூலகம்
மாநகராட்சி மன்றம்
யாழ்ப்பாணம்

பருவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

# ஐரோப்பிய நாடுகளில் அகதிகளுக்கு தஞ்சம் வழங்குக

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2023 மாசி 12 இதழ் 13
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 23 — 02 — 1993

## ஜேர்மனி மாநாட்டில் கோரிக்கை

(லண்டன்)

அரசியல் சூழ்நிலை காரணமாகவும் யுத்தம் காரணமாகவும் தம் நாடுகளை விட்டு ஐரோப்பிய நாடுகளுக்கு வரும் அகதிகளுக்கு புகலிடம் வழங்கப்பட வேண்டும் என 'ஐரோப்பிய இனவெறி எதிர்ப்பு அமைப்புகளின்' கூட்டத்தில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

ஜேர்மனியில் கடந்த இரு நாட்களாக நடைபெற்ற மேற்படி கூட்டத்தில் 50 இற்கும் அதிகமான அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அரசியல் புகலிடம் கோரி ஐரோப்பிய நாடுகளுக்கு வருபவர்களுக்கு ஏற்ப சட்ட

(4-ம் பக்கம் பார்க்க)

## இனப்போரால் பாதிப்புற்ற குழந்தைகளுக்கு அமெரிக்கா உதவி

### 30 கோடி ரூபா வழங்கும்

(கொழும்பு)

இலங்கையில் இனப்போரினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளின் நலனுக்காக, அமெரிக்காவின் சர்வதேச மேம்பாட்டு நிறுவனம் இலங்கை அரசுக்கு 30 கோடி ரூபாவை வழங்க முன்வந்துள்ளது.

இலங்கையில் தொடரும் போரினால் 10லட்சம் குழந்தைகள் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், இவர்களுக்காகச் சர்வதேச நாடுகள் உதவி செய்யவேண்டும் எனவும் 'யுனிசெவ்' அமைப்பு அண்மையில் அவசர வேண்டுகோள் விடுத்ததை அடுத்தே அமெரிக்கா இந்த உதவியை வழங்கவுள்ளது.

இப்பணத்தின் ஒரு பகுதி, இலங்கையில் எயிட்ஸ் நோயினால் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் நலனுக்காகவும்

(4-ம் பக்கம் பார்க்க)

# ● கிளாலி படுகொலை குறித்து அரசு சார்பற்ற விசாரணை அழைப்பை

# இலங்கை அரசு நிராகரித்துவிடும்!

## இதுவரை பதில் இல்லை

(கொழும்பு)

கிளாலி படுகொலை குறித்து அரச சார்பற்ற நீதியான விசாரணை ஒன்றை நடாத்தவேண்டுமென 'சிவில் றயிற்ஸ் மூவ்மென்ற்' என்ற மனித உரிமைகள் அமைப்பு விடுத்த கோரிக்கையை அரசு நிராகரிக்குமென எதிர்பார்க்கப்படுவதாக செய்திகள் கூறுகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ பூநகரி கடற்பகுதியில் புலிகள் - படையினர் மோதல்

(யாழ்ப்பாணம்)

ஆனையிறவுக்கு அண்மித்த பூநகரிக் கடற்பிராந்தியத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு வேளையில் ரோந்து வந்த கடற்படையினருக்கும் புலிகளுக்கும் கடும் மோதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

இருபகுதியினருக்கும் ஏற்பட்ட மோதல் நீண்டநேரமாக இடம் பெற்றதாகவும் அங்கிருந்து வந்தோர் தெரிவித்துள்ளனர்.

இரவு 10-00 மணியிலிருந்து அதிகாலைப் பொழுது வரையில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் பீரங்கிச் சத்தங்களும் மாறி மாறி இடைவிடாது கடற்பகுதியில் கேட்டபடியிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. சேதவிபரங்கள் ஏதும் தெரியவில்லை.

(கி-56)

## கிழக்கில் 'ஒபரேஷன் றணரிஷி'

### யுத்தமுனையில் 3,000 படையினர்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் "ஒபரேசன் றணரிஷி" என்ற இராணுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

[illegible] ளர் ஈடுபட்டுள்ளதாகவும் கூட்டுப்படைத் தலைமையகம் கூறியுள்ளது.

படையினருக்கு உதவியாக விமானப் படையும், கடற்

(4-ம் பக்கம் பார்க்க)

## புலிகள் - ராணுவம்

## 'லக்திவ' பத்திரிகை ஆசிரியர் நேற்று பொலிஸாரால் கைது

(கொழும்பு)

'லக்திவ' பத்திரிகை ஆசிரி[illegible]

'லக்திவ' பத்திரிகை [illegible] ளர்.

[illegible] ஈடுபட்டோரைப் புகைப்பட[illegible]

னுவ நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் கூட்டுப் படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

கடந்த மூன்று தினங்களாக கிழக்கில், திருமலை, மட்டக்களப்புக் காட்டுப் பகுதிகளில் பரவலாக மோதல்கள் இடம் பெற்றுவருவதாகவும், இந்நடவடிக்கையில் சுமார் 3000 படை

# புலிகள் - ராணுவம் கிழக்கில் மோதல்

(கொழும்பு)

திருக்கோணமலை மாவட்டத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும் இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் பல இடங்களில் மோதல்கள் நடைபெற்றுள்ளதாக இராணுவ பேச்சாளர் ஒருவர் நேற்று கொழும்பில் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக திருமலை மாவட்டத்திலுள்ள குச்சவெளிப் பகுதியில் கடந்த இருநாட்க

(4-ம் பக்கம் பார்க்க)

# பச்சிலைப்பள்ளியில் ஆர்ப்பாட்ட பேரணி

(தாளையடி)

தமிழீழ மக்கள் மீது விதிக்கப்பட்டுள்ள பொருளாதாரத் தடை, போக்குவரத்துத் தடை மற்றும் நடைமுறைப் படுத்தப்படும் விமானத்தாக்குதல் எறிகணை வீச்சு போன்றவையைக் கண்டித்து நேற்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று பச்சிலைப் பள்ளி பிரதேசத்தில் நடாத்தப்பட்டது.

பொதுசன அமைப்புக்களின் சார்பில் நடாத்தப்பட்ட இப் பேரணி நேற்றுக் காலை 10 மணிக்கு புலோப்பளையில் இருந்து ஆரம்பிக்கப்பட்டது.

4-ம் பக்கம் பார்க்க)

# யாழ்.குடா எங்கும் மறியல் போர்

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாவிலுள்ள அரச செயலகங்கள் பலவற்றின்முன் னுக்கு நூற்றுக்கணக்கான மக்கள் மறியல் போராட்டத்தை தொடர்ந்தும் நடாத்திவருகிறார்கள்.

பசி, பட்டினி நிலையை போக்கக்கோரியும், உணவுப் பொருட்களை அனுப்பக் கோரியும் இந்த மறியல் போராட்டம் இடம்பெற்றுவருகிறது.

யாழ்ப்பாணம், கரவெட்டி, யாழ். செயலகத்தில் உள்ள தீவுப்பகுதி அரச செயலகங்கள் முன்பாக நேற்றுக்காலை

(4ம் பக்கம் பார்க்க)

**உளவாளிகள் ! ! !**

அவதானமாக இருக்கவும் - - - !

காவியம் படைத்திட

காப்போம் இரகசியம்.

(கொழும்பு)

'லக்திவ' பத்திரிகை ஆசிரியர் மகேந்திர ஜயசுந்தர நேற்று பொரளை பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

'லக்திவ' பத்திரிகை காரியாலயம் சீல் வைத்து மூடப்பட்டதைக்கண்டித்து லக்திவ' காரியாலயம் முன் பத்திரிகையாளர்கள் சத்தியாக்கிரக ஆர்ப்பாட்ட நடவடிக்கையில் ஈடுபட்டோரைப் புகைப்படமெடுக்கும் வேளையில் படப்பிடிப்பாளர் ஒருவர் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார்.

ஆர்ப்பாட்டப் பேரணியிலும் சத்தியாக்கிரக நட

(4-ம் பக்கம் பார்க்க)

# விமான ஓட்டம் நேற்று அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்க்குடா வான் பரப்பில் நேற்று விமான ஓட்டம் அதிகரித்துக்காணப்பட்டது

ஹெலிகொப்டர்கள் பலாலியிலிருந்து அடிக்கடி தென்மராட்சிப் பகுதிநோக்கிப் போவதும் வருவதுமாக இருந்தன. அவ்ரோ விமானமும் அடிக்கடி சென்று வருவதையும் காணக்கூடியதாகவும் இருந்தது

கிளாலி கடற்பகுதியிலும் இரவு வேளையில் ஹெலிகொப்டர்கள் அடிக்கடி சுற்றிய வண்ணமிருந்தன. (56-சி

# ஷெல் தாக்கும் ஹெலிச் சூடும்

(யாழ்ப்பாணம்)

நேற்றுக் காலை 10 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து சுமார் அரை மணி நேரமாக மேற்குப் பக்கம் தொடர்ச்சியான எறிகணை வீச்சு இடம் பெற்றது. அல்லிப்பளை கடற்கரை, பேராலைப்பகுதிகளில் இவ்எறிகணைகள் விழுந்து வெடித்தன.

எறிகணை வீசப்பட்டநேரம் ஹெலி ஒன்று ஆனையிறவு முகாமை அண்டிய பகுதிகளை பலமுறை சுற்றி வட்டமிட்டபின் மேற்குப்பக்கம் நோக்கிச் செய்கையில அல்லிப்பளை கடற்கரையை அண்டியபகுதிகளில் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்தபடி சென்றது.

[163-56-சி]

# பிரபா, பொட்டு அம்மான் மீது ராஜீவ் கொலையில் தனிவழக்கு

(சென்னை)

ராஜீவ் கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட 12 பேர் மீதான வழக்கு இல்லையென வும் 26 பேர் மீது வழக்கு தாக்கல்செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இக் கொலைவழக்கில் குற்றம் சாட்டப்பட்டிருந்த 41 பேரில் 12 பேர் மீதான குற்றச்சாட்டுகளை விசேட புலனாய்வு பிரிவு கைவிட்டுள்ளது. இவர்கள் இறந்து போனமையால் இவர்கள் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவில்லை.

இந்த வழக்கு மேலும்இரண்டாகப் பிரிக்கப்படவுமுள்ளது. புலிகளின் தலைவர் திரு பிரபாகரன், பொட்டு அம்மான், ...களின் புலனாய்வுப்பிரிவின்

(4ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

ஜாம்போத்தல்கள், பியர் போத்தல்கள், கோடியல் போத்தல்கள் என்பன எம்மால் நியாய விலையில் கொள்வனவு செய்யப்படும் சுரபி பழரசத்தொழிற்சாலை, கோப்பாய். -கி 7241

### PITAWAKKA PLUS

மதுபானத்தால் ஏற்படும் ஈரல் வியாதிகளுக்கும் வேறு மருந்துகளால் உடலில் ஏற்படும் நச்சுத்தன்மைகளுக்குமாக 9 வகை மூலிகைகள் அடங்கியது. கிடைக்குமிடம்: எஸ். ரி மெடிக்கல்ஸ், ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். (கி-7180)

### சாகித்திய மண்டலப் பரிசு

1989 ஆம் ஆண்டு நாடகத்திற்கான சாகித்திய மண்டலப் பரிசைப் பெற்ற நூல் - 200 க்கும் அதிகமான நாடகங்களை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் முதலாம்பிள்ளை 30/- (கி-7227)

## திருடனைப் பிடித்த காவலாளிக்கு பாராட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை அரசினர் ஆதார வைத்தியசாலையில் இரவு வேளையில் மின்கம்பிகளை வெட்டித் திருடியவரை பிடித்து காவல்துறையினரிடம் ஒப்படைத்த வைத்தியசாலை காவலாளியை வைத்தியசாலை அபிவிருத்திச்சபை பாராட்டவிருக்கிறது.

காவலாளியின் இவ்வீரச் செயலை பாராட்டிய வைத்தியசாலை அபிவிருத்திச்சபை அவருக்கு பரிசாக 1000 ரூபா பணத்தையும் வழங்கவுள்ளது.

## இராசி பலன்

23-02-1993

செவ்வாய்க்கிழமை

(தமிழுக்கு மாசி 12)

துதியை மு. இ. 11-09 வரை, பூரட்டாதி மு. இ. 7-03 வரை, மரணயோகம், இராகுகாலம் மாலை 3-31 முதல் 5-01 வரை, சுபநேரம் காலை 11-01 முதல் 12-31 வரை.

மேடம்: விசேட கவலை, ...

## கணிதம் கற்றல் கற்பித்தல் உபகரண தயாரிப்புப் போட்டி

(யாழ்ப்பாணம்)

கணிதபாட கற்றல் கற்பித்தல் போட்டி யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம் சேவைக்கால ஆலோசகர்களின் மாணவர்களிடையே நடத்தவுள்ளது

கற்பித்தல் உபகரணத் தொகுதியை இம்மாதம் 28-ந் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையம் கோப்பாய் மகாவித்தியாலயத்தில் ஒப்படைக்கும்படி கணித உதவிக்கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பாடசாலை கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் பயன்படுத்த பயனுடையது என மதிக்கப்படும் உபகரணத் தொகுதியை செய்து ஒப்படைத்தவர்களுக்கு யாழ். மாவட்ட கணித விஞ்ஞான மூலவள நிலையத்தின் ஓராண்டு நிறைவு விழாவில் தகைமைச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதுடன் தலா 200 பத்துக்குட்பட்ட பரிசில்களும் வழங்கப்படும்.

## பாலர் பாடசாலை திறப்புவிழா

(சாவகச்சேரி)

கைதடி டயர் தொழிற்சாலை அகதிமுகாமில் இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ்கிளை தலைமை அலுவலகத்தால் அமைக்கப்பட்ட பாலர் பாடசாலையின் திறப்புவிழா அண்மையில் நடைபெற்றது.

(4-ம் பக்கம் பார்க்க)

## மன்னாருக்கு உணவு, மருந்து எடுத்துச்செல்ல அனுமதி

(கொழும்பு)

மன்னாருக்கு உணவு, மருந்து வகைகளைக் கொண்டுசெல்ல அனுமதி வழங்கப்பட்டுள்ளது

ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் தொண்டர் ஸ்தாபனங்கள் மன்னாருக்கு உணவுப் பொருள்கள், மருந்துகள் ஆகியவற்றை கொண்டுசெல்ல கூட்டுப்படை தலைமை அலுவலகம் அனுமதி வழங்கியுள்ளது என மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்தார். (ஐ-சி)

## அகில இலங்கை இளங்கலைஞர் மன்றத்தின் 13வது இசைவிழா

—o o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o-o o-o o o o-o-o—

இடம்: மன்ற கலாமண்டபம்

சட்டநாதர் வீதி, நல்லூர்

15-ம் நாள் 23-2-93 செவ்வாய்

உதயன் பத்திரிகை நிறுவனத்தின் ஆதரவில்

மாலை 4·00 — 5-00 மங்கள இசை

நாதஸ்வரம்:

எ. முருகானந்தம், கே. ஸ்ரீதரன்

தவில்:

என். ஆர். எஸ். ரவீந்திரன்,
என். ஆர். எஸ். சுதாகரன்

5-00 — 5-15 வீணை

ஜெயபாரதி யோகநாதன், யாமினி தர்மலிங்கம்
மிருதங்கம்: கே. கண்ணதாசன்

5-15 — 5-30 பாட்டு

ஸ்ரீ நந்தகோபன், ஞா. ஸ்ரீமதா,
க. மலர்விழா, சி. ரஜனி,
இ. துஷ்யந்தி, சி. சிவாஜினி,
ஸ்ரீ ஸ்ரீரஞ்சனி, வ. துஷ்யந்தி,
க. கமிலினா

வயலின்: கிருஷ்ணவேணி மயில்வாகனம்
மிருதங்கம்: கே. கண்ணதாசன்

5-30 — 6·00 பாட்டு: நந்தினி ராமலிங்கம்

வயலின்; ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: கே. கண்ணதாசன்

## புதிய வேல்

யாழ்ப்பாணம்

நல்லைக் கந்தனுக்கு கொடிச்சீலை வழங்கும் வேல்முருகன் ஆலயத்தில் மாணிக்கக் கல் பொறிக்கப்பட்ட புதிய வேல் மக்கள் வழிபாட்டுக்காகப் பிரதிஷ்டைசெய்யப்பட்டுள்ளது.

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன் சந்திரகுமார் கபில்ராஜ்

(கபி)

தாயின் மடியில்: 1984 - 10 - 05
இறைவன் அடியில்: 1992 - 03 - 06

கண்ணின் மணியென திகழ்ந்த கபியே
காலன் உன்னை கவர்ந்தோ ராண்டானது
என்றும் எங்கள் நினைவில் வாழும் கபியே
உன்னை நாளும் நாம் மறவோம் கபியே

குடும்பத்தினர்.

26. சுப்பிரமணியம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம். (கி-7255)

விறகைச் சிக்கனப்படுத்தும் இரட்டைச் சூட்டடுப்புகள்

நம்புவது சிரமம் ஆனாலும் உண்மை

☐ 30% விறகுச் சிக்கனம்
☐ ஒரே அடுப்பில் இரு சமையல்கள்

விற்பனைக்கு வந்துவிட்டன!

மேடம்: விசேட வெலை,
முன்கோபம், மனவிரக்தி.

இடபம்: தேவையற்ற செலவு, தொழில் லாபம், தோழமை உறவு.

மிதுனம்: தொழில் பேட்டி. எதிர்பார்த்த வெற்றி, குடும்ப சுகம்.

கடகம்: குடும்ப துயரம், சகோதரபகை, பயண அலைச்சல்.

சிங்கம்: வாக்கினால் ஏமாற்றம், கண்டிப்பு. தொழில் கஷ்டம்.

கன்னி, புதிய ஸ்தானம். மனமகிழ்ச்சி, சுபநிகழ்ச்சி.

துலாம்: திறமை பெருமை, பெண் உதவி, புத்திரர் பகைமை.

விருச்சிகம்: உடல் உபாதை, காரன்களின் நிந்தனை, மனக் குமுறல்.

தனுசு: வழித் தொல்லை, மனைவியால் ஆவேசம், கடன் தொல்லை.

மகரம்: கடித உறவு, தொழில் லாபம், தெய்வீக செலவு.

கும்பம்: அதிகாரிகள் சினம், உறவுப் பயோசனை, பணமுடை.
மீனம்: திருமண பேச்சு, சந்துபசாரம், இனசன பகை.

ஜோதியர்

---

மிருதங்கம்: ஜே. கண்ணதாசன்

6-00 — 6 45 பாட்டு: வாசஸ்பதி ரஜீந்திரன்
வயலின்: ஆர். எஸ். கேசவமூர்த்தி
மிருதங்கம்: எஸ். துரைராஜா

6-45 — 7-15 சிறப்புரை
விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் கலந்து உரையாற்றுவர்

7-15 — 8-15 மங்கள இசை
நாதஸ்வரம்:
கே. எம். பஞ்சாபிகேசன், எம். பி. நாகேந்திரன்
தவில்:
கே. பழனிமலை முருகையா, சுந்தரலிங்கம்

8-15 — 9-15 ★ பரதநாட்டியம் ★
கொக்குவில் "கலாபவன" மாணவிகள்
நட்டுவாங்கம்; திருமதி சாந்தினி சிவநேசன்
பாட்டு: வர்ணராமேஸ்வரன்
மிருதங்கம்: எஸ். மகேந்திரன்
வயலின்: பரக்கிரமலட்சுமி நடராஜா

9-15 — 10-15 நாடகம்
காரை சுந்தரம்பிள்ளையின் நெறியாள்கையில் கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலை மாணவர்கள் வழங்கும்

## ★ பாஞ்சாலி சபதம் ★

---

வாழ்த்துகிறோம்

# நியூ லிங்கம் ஸ்ரோர்ஸ்

திருநெல்வேலி மார்கட்


(எ 2861)

---

...றப்பகளுக்கு வந்துவிட்டன!

முற்றிலும் புதிய தொழில்நுட்பத்துடன் அமைக்கப்பட்ட

# இரட்டைச் சூட்டடுப்புகள்



உங்கள் வீடுகளில் குறைந்த செலவில், கூடிய பயன்தரும் வகையில் கட்டித்தர தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழக சக்திப் பகுதியினர் காத்திருக்கின்றனர்.

நீங்கள் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

## "சக்திப் பகுதி"

## தமிழீழ பொருண்மிய மேம்பாட்டுக் கழகம்

தாவடி

(எ 2906)

# இன்று ஸ்ரீ ராமகிருஷ்ணரின் ஜென்ம தினம்

பொதுவாக உலகிடை அறிவு என்ருல் புத்தக அறிவு தான் மிகவும் முக்கியமாக கருதப்படுகின்றது. புத்தகப் படிப்பும் வெறும் பட்டங்களும் வாழும் வகையை காட்டுவதில்லை இருப்பினும் அதனுல் வரும் கவர்ச்சி, போலிக்கௌரவம் பலரை இந்த வழியில் இட்டுச்செல்கின்றது. நமது விஞ்ஞான யுகத்திலும் கையெழுத்து போடத்தெரியாதவர் பள்ளிக்கூடப்படிப்பு சற்றும் பெருதவர் இன்று நம்மதியில் அரும்பெரும் வாழ்க்கை தத்துவங்களை தமது 50 வருட வாழ்வில் திறம்பட அனுஷ்டித்து எமக்கு வழிகாட்டியாக திகழ்கிருர்.

சமய வாழ்வு சடங்குகள், வெளித்தோற்றங்களவில் மட்டும் வாழும் பலருக்கு ஸ்ரீராம கிருஷ்ணரின் வாழ்வு கவர்ச்சி கொடுக்காததில் வியப்பொன்றுமில்லை ஸ்ரீராமகிருஷ்ணரிடத்தில் படித்தவர்கள், விஞ்ஞானிகள், பாமரர்கள், நாஸ்திகர்கூட சென்று தம்தம் வாழ்வை வளம் உள்ளதாகச்செய்து இருக்கிருர்கள் ஸ்ரீராமகிருஷ்ணர் ஒன்றையும் அழிக்கவரவில்லை, நிறைவு செய்யவே அவதாரம் எடுத்தார்.

இச்சிறிய நிகழ்ச்சி ஸ்ரீராமகிருஷ்ணரின் இரக்க சுபாவம் மனிதனிடத்து மட்டுமல்ல மிருகங்களிடையும் இருந்ததை நமக்குகாட்டுகிறது ஒருபெண் பக்தர் ஸ்ரீராமகிருஷ்ணரை தரிசிக்க சென்றபொழுது "எனக்கு ஒரு முக்கிய உதவி செய்யமுடியுமா" என்று கேட்டார். தான் தரும்பணியை சற்றும் அலட்சியம் செய்யாமல் செய்யவேண்டும் என்ருர். இவர் கேட்டசெயல் எல்லோரையும் வியப்பிலாழ்த்தியது. தனது அறையில் ஒரு பெண் பூனை மூன்று குட்டிகளை ஈன்றெடுத்தன. தாயையும் குட்டிகளையும் தனக்காக பராமரிக்கும்படியும் எக்காரணத்துக்காகவும் வேறு இடத்தில் கொண்டுபோய்விட வேண்டாம் என்று கூறினர். ஸ்ரீராமகிருஷ்ணரின் வரலாற்றில் அவ்வருட முடிவில் தாய்ப்பூனை திடீர் என்று நோய்வாய்ப்பட்டு இறந்ததாகவும் இப்பெண்மணி பூனையின் அந்திம காலத்தில் கங்கைஜலம் தெளித்து ஸ்ரீராமகிருஷ்ணரின் திவ்விய நாமத்தை உச்சரித்ததாகவும் அறிகிருேம் இப்பெண்மணி ஸ்ரீராமகிருஷ்ணரைத் தரிசிக்கச்செல்லும்நேரத்தில் எல்லாம் இப்பூனை பற்றியும் அதனது குட்டிகளைப் பற்றியும் சுகம் விசாரிக்கத் தவறியதில்லை.

குருதேவரது அருட்பிரவாகம் இன்று உலகில் பல நாடுகளில் இவரது பெயரிஞல் இயங்கும் ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தின் மூலம் வெளிவருவதை நாம் தெளிவாக காணலாம். அடியேன் சில மாதங்களுக்கு முன் இங்கிலாந்து, பிரான்ஸ்ஸ்ரீராமகிருஷ்ண சங்கத்தில் சிலநாட்கள் தங்கிய பொழுது அம்மடத்து தலைவர் சுவாமிகள் காட்டிய பக்தியும் அன்பும் ஸ்ரீராமகிருஷ்ணரின் கருணையின் முத்திரையே யாகும். இவரது புனிததினமான இன்று வாழ்த்தி வாழ்வை உயர்வடையச்செய்வோமாக.

சுவாமி சித்ரூபானந்தா

## ரயிலை தாக்கி சேதப்படுத்திய யானை!

(டாக்கா)

குட்டியானையை மோதிக் காயப்படுத்திய ரயிலின் எஞ்சினை தாக்கி தாய்யானை ஒன்று தனது கோபத்தை தீர்த்துள்ளது.

தனது குட்டியை மோதிக் காயப்படுத்தியதால் ஆத்திரமுற்ற தாய்யானை தண்டவாளத்திற்கு குறுக்கே நின்று அடுத்ததாக வந்த ரயில் ஒன்றை நிறுத்தி எஞ்சினை கடுமையாகத் தாக்கி சேதப்படுத்தியது.

பங்களாதேஷின் வடகிழக்குப் பகுதியில் இச்சம்பவம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது. (இ)

## விமானத்தில் இயங்கும் பறக்கும் கண் ஆஸ்பத்திரி

(மானிப்பாய்)

'ஏ சி பி ஸ்' என்றழைக்கப்படும் 'பறக்கும் கண் ஆஸ்பத்திரி' எதிர்வரும் 27ம் திகதி சனிக்கிழமை முதல் ஒருமாத காலத்துக்கு இலங்கையில் செயல்படவுள்ளது.

இப்பறக்கும் கண்ணுஸ்பத்திரி இலங்கைக்கு விஜயம் செய்வது இரண்டாவது தடவையாகும். போதனு கண்ணுஸ்பத்திரியாக மாற்றப்பட்டுள்ள 'டி. சி 8 விமானம்' முதல் முறையாக 1984ம் ஆண்டு இலங்கைக்கு வந்து கட்டுநாயக்காவில் இரு வார காலம் தங்கியிருந்ததோடு 150 கண் சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்பட்டன

அடுத்த வாரம் வந்துசேரும் இக் கண்ணுஸ்பத்திரியில் கண் சிகிச்சையின் புதிய முறைகள் நுணுக்கங்கள்பற்றி உள்ளூர் டாக்டர்களுக்கும் தாதிமார்களுக்கும் மற்றும் வைத்திய ஊழியர்களுக்கும் போதிக்கப்படுவதுடன் பல கண் சத்திர சிகிச்சைகளும் மேற்கொள்ளப்படும். (71-சி)

## கோழிகளுக்கு தடுப்பூசி

(அளவெட்டி)

யாழ். புனிதமரியாள் பேராலயத்துக்கு முன்பாகவுள்ள கிறீன் பீல்ட் விளையாட்டுக்கழக மண்டபத்தில் இன்று காலை 8-30 மணிக்கு கோழிகளுக்கு இலவசமாக நோய்த் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது. (59-சி)

## பிரதமர் மட்டுநகர் விஜயம்

(கொழும்பு)

அடுத்த மாதம் முதலாம் திகதி பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்கா மட்டக்களப்புக்கு விஜயம் செய்யவுள்ளார்.

மட்டக்களப்பு இந்துக் கல்லூரியில் பிரதம அமைச்சின் இடம்பெயர்சேவையும், நிதி கொள்கைத் திட்டமிடல் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சு, தொழில் தொழிற் பயிற்சிகளின் அமைச்சின் இடம்பெயர் சேவையும் நடைபெறும். (இ)

## படிப்பகம் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

இடம்பெயர்ந்த தீவக மக்களின் நன்மை கருதி யாழ். நகரில் படிப்பகம் ஒன்று தொழில் அதிபர் க. கனகராசாவினுல் திறந்து வைக்கப்பட்டது

வேலணை பிரதேச சபை விசேட ஆணையாளர் இ.இளங்கோவன் தலைமையில் இவ் வைபவம் இடம்பெற்றது. (க

## மீட்புநிதி சேகரிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் உதவி அரச அதிபர் பிரிவிலும், யாழ்ப்பாணம் உதவி அரச பிரிவிலும் இதுவரை மீட்புநிதி செலுத்தாதோர் இன்றும், நாளையும் செலுத்த முடியும்

நல்லூர் அரச அதிபர் பிரிவைச்சேர்ந்தவர்கள் இன்று 23-ம் திகதி பிற்பகல் 2 30 முதல் 4.30 வரை நல்லூர் மங்கையற்கரசி மகாவித்தியாலயத்திலும், யாழ்ப்பாண உதவி அரச அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்கள் நாளை 24ம் திகதி பிற்பகல் 2 30 முதல் 4.30 வரை சென் பற்றிக்ஸ் கல்லூரியிலும் செலுத்தலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

நல்லூர் உதவி அரச பிரிவைச்சேர்ந்தவர்கள் இன்று சென். பற்றிக்ஸ் கல்லூரியில் மீட்பு நிதியைச் செலுத்தலாமென 22ம் திகதி எமது பத்திரிகையில்தவறுதலாக வெளிவந்துள்ளது.

## இன்று

(மானிப்பாய்)

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் 158வது ஜெயந்தி விழா இன்று 23ந் திகதி பி. ப 3-30 மணி தொடக்கம் 5-30 வரை திருநெல்வேலி இராமகிருஷ்ணலயத்தில் நடைபெறும்.

இவ்வைபவத்தில் அவதார புருடர் ஸ்ரீ ராமகிருஷ்ணர் என்னும் பொருள் பற்றி யாழ் செயலக பிரதம கணக்காளர் திரு. சி சிவபாலன் உரை நிகழ்த்துவார். மேலும் பல சிறப்புரைகள் இடம்பெறும். (71)

0 0 0

(உடுவில்)

1992ம் ஆண்டு நடைபெற்ற ஆரும் ஆண்டு மாணவர்களுக்கான புலமைப்பரிசில் பரீட்சையில் கூடுதலான புள்ளிகள் பெற்று சித்தியடைந்த மருதனுமடம் கல்விக்கோட்டத்தைசேர்ந்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட உள்ளன.

பரிசளிப்பு வைபவம் இன்று 23ந் திகதி இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (109)

0 0 0

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவிலுள்ள சந்திரபுரம் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்தில் இன்று 23ம் தேதி பிற்பகல் 3-00 மணிக்கு தையல் பயிற்சி வகுப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பயிற்சி ஆரம்ப விழாவின் பிரதம விருந்தினராக தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பு. சுந்தரம்பிள்ளையும் சிறப்பு விருந்தினராக லயன்ஸ் கழக உறுப்பினர் டாக்டர் பிலிப்பும் கலந்து கொள்கின்றனர். (161)

0 0

(யாழ்ப்பாணம்)

இன்று வைத்தீஸ்வராக் கல்லூரியில் அதிபர் சி. சிவசரவணபவன் தலைமையில் இராமகிருஷ்ண ஜெயந்தி விழா நடைபெறும்.

சிறப்புச் சொற்பொழிவு; செல்வி புஷ்பா செல்வநாயகம் நிகழ்த்துவார்.

கலை நிகழ்ச்சிகள் இடம் பெறும். (சி)

## செய்திச்சிதறல்

### உள்ளூராட்சி ஊழியர் சங்கம்

(பருத்தித்துறை)

யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஊழியர்களின் நலன்களை கவனிப்பதற்கென இம் மாவட்ட உள்ளூராட்சி ஊழியர்களினுல் "யாழ் மாவட்ட உள்ளூராட்சி ஊழியர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்டுள்ளது. (52)

### விவசாய கல்லூரி

(கொழும்புத்துறை)

வவுனியா விவசாயக் கல்லூரி மீண்டும் இயங்கவிருக்கிறது. இக் கல்லூரி மீண்டும் இயங்க ஆரம்பித்ததும் விவசாய டிப்ளோமா பாடநெறி உட்பட வேறும் பல குறுகிய நீண்டகால பயிற்சிகளும் ஆரம்பிக்கப்பட இருப்பதாக தெரியவருகிறது. (154)

### உதவிஅரசஅதிபர்கள் இடமாற்றம்

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபராக பணிபுரியும் திரு. ஹெர்டர் யோசேப் வடக்குகிழக்கு மாகாணசபை திருகோணமலையிலுள்ள திட்டமிடல் அமைச்சுக்கும், ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபராக பணிபுரியும் திரு. நா. வேதநாயகம் சண்டிலிப்பாய்க்கும் இம்மாதம் முதல் இடமாற்றம்செய்யப்பட்டுள்ளனர். (71-சி)

### புதிய பயிற்சி வகுப்பு

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வித்திணைக்கள முறைசாராக் கல்விப் பிரிவினரால் பாடசாலைகளில் நடாத்தப்பட்டு வரும் பயிற்சி நெறிகளுக்கான புதிய பயிற்சி வகுப்புக்கள் ஏப்ரல் மாதத்தில் ஆரம்பமாக உள்ளன. [109]

### படிப்பகத் திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

மெய்கண்டதேவா ஆதீன நூற்படிப்பகத் திறப்புவிழா யாழ். கலைப்புலவர் வீதி திருவாசகமன்றத்தில் அண்மையில் நடைபெற்றது. படிப்பகத்தை திரு. சி. பக்கிரிசாமி திறந்து வைத்தார். முதறிஞர் க. சி. குலரத்தினம், டாக்டர் நா. கனகரத்தினம், திரு. க. சிவப்பிரகாசம் ஆகியோர் உரையாற்றினர்.

### லக்ஸ்பிறே விநியோகம்

(உடுவில்)

கன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தினர் தமது கிளைக்கடைகள் மூலம் குடும்ப பங்கீட்டு அட்டை ஒன்றுக்கு 400 கிறும் லக்ஸ்பிறே பால் மா, மூன்று தீப்பெட்டிகள் ஆகியவற்றை நியாயவிலையில் தற்போது வழங்கி வருகின்றனர். (109)

### மரம் நடுகை திட்டம்

(நெல்லியடி)

வடமராட்சி கிழக்கு தமிழர் புனர்வாழ்வு கழக மரநடுகைத் திட்டம் அண்மையில் செம்பியன்பற்று றோ. க. த. க. பாடசாலையில் ஆரம்பமானது. இவ்வைபவத்திற்கு திரு. எஸ். அரியரத்தினம் தலைமை வகித்தார். (160)

### குழாய் கிணறுகள்

(அரியாலை)

சரவெட்டி மருதியில் நெல்லியடி பிரதேச சபையினுல் அத்துளு அம்பாள் ஆலயத்திற்கு அருகாமையிலும் வைரவர் கோவில் முன்பாகவும் கடந்த வாரம் இரு குழாய் கிணறுகள் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன. (59-சி)

### கௌரவிப்பு

(பருத்தித்துறை)

தவில் வித்துவான் திரு. சண்முகவடிவேல் ஜெகநாதனுக்கு 'கானசாகரம்' பட்டம் சூட்டப்பட்டு தங்கப்பதக்கம் வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை தம்புருவளை சித்திவிநாயகர் தேவஸ்தானத்தின் சார்பில் ஆலய பிரதமகுரு சிவஸ்ரீ வ. வே. தியாகராஜாக் குருக்கள் 'கானசாகரம்' பட்டத்தைச்சூட்டி தங்கப்பதக்கத்தை வழங்கினர்.

### விளையாட்டுப் போட்டி

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கி வரும் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே வருடம் தோறும் நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள் தற்போதுஆரம்பமாகி நடைபெற்று வருகிறது. (154)

### உபகரணங்கள் விநியோகம்

(பருத்தித்துறை)

வல்வெட்டித்துறை ஆதிகோவில் மீனவர்களில் வன்செயலினுல் கடலில் இறந்தும், காணமல் போயுமுள்ள 26 குடும்பங்களிலுள்ள கல்வி கற்கும் சிறுவர்களுக்கான பாடசாலை சீருடைகள், பாடசாலை உபகரணங்களை கன்னுகம் லயன்ஸ் கழகம், குரும்பசிட்டி சன்மார்க்க சபை என்பன அன்பளிப்புச் செய்துள்ளன. (52)

### உலர் உணவு விநியோகம்

(உடுவில்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்து, கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் குடியிருக்கும் மக்களுக்கு உலர் உணவுப் பொருட்கள் விரைவில் வழங்கப்படவுள்ளது. (109)

# இடருறும் தமிழீழமக்களுக்கு சாரணர் உதவ வேண்டும்

## — இளங்குமரன் உரை

(யாழ்ப்பாணம்)
தமிழீழத்தில் தற்கால போர்க்காலச் சூழ்நிலையில் இடருறும்மக்களுக்கு சாரணிய இயக்கம்சேவை செய்ய வேண்டும்.

இவ்வாறு தமிழீழ கல்விப் பொறுப்பாளர் திரு இளங்குமரன் யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெற்ற சாரணிய இயக்க ஸ்தாபகர் பேடன் பவல் நினைவு தினக் கூட்டத்தில் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது; குண்டு வீச்சுக்கள் எறிகணைத் தாக்குதல்களினால் மக்கள் சாயம் அடைகிறார்கள். பொருளாதாரத்தடை, போக்குவரத்துத்தடை என்பவற்றால்மிகவும் துன்பம் அனுபவிக்கிறார்கள். ஓர் போர் வீரனை பேடன் பவல் எப்படி இடருற்ற மக்களுக்கு சேவையாற்றினாரோ அந்த போன்று எமது தமிழீழத்தில் சாரணிய இயக்கங்கள் சேவைபுரிய வேண்டும்.

தமக்கு வருகின்ற இடர்களை சகித்துக் கொண்டு துன்பப் படுகின்ற ஏனைய மக்களுக்கு பணியாற்றியவர் சாரணர் ஸ்தாபகர் பேடன் பவல்

போராளிகள் மண்ணைக் காக்கின்ற பணி போன்று சாரணிய இயக்கங்கள் தமது நாட்டையும், மக்களையும் காப்பாற்ற வேண்டும் என்றார்.

விழாவுக்குசாரணிய இயக்க யாழ்.மாவட்ட ஆணையாளர் இ.மகேந்திரன் தலைமை வகித்தார். பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பொ பாலசுந்தரம்பிள்ளை, யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் இரா. சிவச்சந்திரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி வேலாயுதம் ஆகியோரும் உரையாற்றினர். (சு – சி)

### யாழ்-குடா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
முதல் நண்பகல் வரை மறியல் போராட்டம் நடாத்தி இவற்றின் அனைத்து செயற்பாடுகளையும் மக்கள் ஸ்தம்பிதமடையச் செய்தனர்.

இதேவேளை சண்டிலிப்பாய் பிரதேசசெயலகம் முன் நேற்று 3வது நாளாக மறியல்போர் நடைபெற்றது.
(56-161-159-71-72-சி)

### பாலர் பாடசாலை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)
செஞ்சிலுவைச் சங்க சாவகச்சேரி கிளைத்தலைவர் க.கந்தசாமி தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் தென்மராட்சி பிரதேச செயலர் திரு. பூ. சுந்தரம்பிள்ளை பிரதமவிருந்தினராகக்கலந்து கொண்டு பாலர் பாடசாலையை சம்பிரதாயபூர்வமாகத் திறந்துவைத்தார்.
(155)

# நிவாரண வெட்டை எதிர்த்து மகஜர்

(யாழ்ப்பாணம்)
சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவிலிருந்து இடம் பெயர்ந்து மீளவும் தமது இருப்பிடங்களுக்குச் சென்று குடியேறிய மக்களுக்கு நிவாரணம் மறுக்கப்பட்டுள்ளது இது குறித்து சண்டிலிப்பாய் வலி மேற்கு சனசமூக நிலையங்களின் சம்மேளனத்தினர் யாழ் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரிடம் புகார் தெரிவித்துள்ளனர்.

நேற்று இவர்கள் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி திலகநாயகம் போலிடம் தமது பிரச்சனைகளை நேரில் எடுத்துக் கூறி மகஜர் ஒன்றையும் கையளித்தனர். அவரும் தான் திட்டப்பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு அவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு ஆவன செய்வதாகக் கூறியுள்ளார். (159 – இ)

# மரண அறிவித்தல்

## குமாரவேலு கந்தையா நாகரத்தினம்

காரைநகர், களபூமி, வலுப்போடையைச் சேர்ந்த வைத்தியர் குமாரவேலு கந்தையாவின் அன்பு மனைவி நாகரத்தினம் 22-02-93இல் காலமானார். அன்னார், சி. இரத்தினபூபதி, சோ. இராசபூபதி, தி. நடராஜ தினபூபதி ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம், காலஞ்சென்ற சோமசுந்தரம், க. தில்லைநாதன் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார். தற்போது வசித்து வந்த சுழிபுரம்-மேற்கு, சுழிபுரம் என்ற விலாசத்தில் 23-02-93 (இன்று) செவ்வாய்க்கிழமை அன்னாரின் ஈமக் கிரியைகள் நடைபெற்று, திருவடிநிலை மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
(இ 7257) மு. நித்தியானந்தம்.

## கந்தையா சண்முகநாதன்

(ஓய்வுபெற்ற படவரைஞர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

காலஞ்சென்ற கலேசியன் பென்சனியர் கந்தையா தம்பதிகளின் அருமைப் புதல்வனும், திரு. குணநாயகம் (இளைப்பாறிய எஸ்.பி.எச்.ஐ. அவுஸ்திரேலியா) அவர்களின் மருமகனும், பிறேமாவின் அன்புக் கணவரும், ரமேஷ் (பிரான்ஸ்), காயத்திரி (யாழ். இந்து மகளிர் கல்லூரி ஆண்டு-10) ஆகியோரின் பாசமிகு தந்தையும், திருச்சிற்றம்பலம், பொன்னம்பலம் (பிரான்ஸ்), நாகபூஷணி ஆகியோரின் அன்புச் சகோதரரும், யோகரஞ்சிதம், ஜெயரஞ்சிதம், சுஜேதினி (அவுஸ்திரேலியா), மதனரஞ்சிதம் (லண்டன்), புஷ்பரஞ்சிதம் (அவுஸ்திரேலியா), சிவநேசன் ஆகியோரின் மைத்துனருமான சங்கானையைச் சேர்ந்த கந்தையா சண்முகநாதன் காலமானார். ஈமக் கிரியைகள் நேற்று முன்தினம் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைகள் கோண்டாவில் மயானத்தில் நடைபெற்றன. உறவினர்கள், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்:
வன்னியசிங்கம் வீதி, மனைவி, பிள்ளைகள்.
கோண்டாவில். (இ 7256)

### பாராட்டு விழா

(யாழ்ப்பாணம்)
5ம்ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சிறப்புச் சித்தி பெற்ற மாணவர்களுக்கு, கோட்டமட்டத்தில் பாராட்டு விழாக்கள் நடாத்துவதற்கு தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரும், விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும் முன்வந்துள்ளன.

இன்று, மருதனாமடம் கோட்ட மாணவர்களுக்கு இராமநாதன் கல்லூரியில் காலை 9 மணிக்கும், பண்டத்தரிப்பு கல்விக்கோட்ட மாணவர்களுக்கு பிற்பகல் 2-30 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்திலும் பாராட்டு வைபவங்கள் நடைபெறவுள்ளன. (வி-சி)

### பச்சிலைப்பள்ளியில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
பகல்12 மணியளவில் பச்சிலைப் பள்ளிஉதவி அரசாங்க அதிபர் பணிமனையை வந்தடைந்தது. பேரணிமுடிவில் பொதுசன அமைப்புகளால் ஜனாதிபதிக்குஅனுப்புவதற்கெனதயாரிக்கப்பட்ட மகஜர் பகிரங்கமாக வாசிக்கப்பட்டபின் பச்சிலைப்பள்ளி உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரையிடம் ஒப்படைக்கப்பட்டது.

பொதுமக்கள், பாடசாலை மாணவர்கள் பெருந்தொகையாக இதில் கலந்து கொண்டனர். (161-சி)

### பிரபா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
வீர் அணித்தலைவி அகிலா ஆகியோரை தேடிக் கண்டுபிடித்து நீதிமன்றிற்கு கூட்டிவரமுடியாத காரணத்தினால் இவர்கள் மீது தனியான வழக்கு தாக்கல் செய்யப்படுமென வழக்கு தொடுநர் கூறியுள்ளார்.

தற்போது காவலில்வைக்கப் பட்டுள்ள 26 பேர் மீது வழக்கு விசாரணை நடைபெறும். ரஜீவ் கொலையுண்ட இடத்தில் நின்ற நளினி முதலாம் எதிரியாகக் குற்றஞ்சாட்டப் பட்டுள்ளார்.

மேலும் சந்தேக நபர்கள் திரும்பத்திரும்ப சட்டத்தரணிகளை மாற்றிக்கொள்வதாகவும் ஆஜராகும் சட்டத்தரணிகளை பற்றி திட்டவட்டமாக அறிவிக்க வேண்டுமெனவும் நீதிபதி சித்திக் கூறியுள்ளார். (சி)

# அரச அதிபர்களுக்கு பதில் மாவட்ட செயலர்கள்

(கொழும்பு)
அரசாங்க அதிபர்களுக்கு பதிலாக மாவட்ட செயலாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

புதிய கொள்கையின்படி மாவட்ட நிர்வாகம் செய்து வந்த பல வேலைகளை பிராந்திய செயலகங்களுக்கு மாற்றப்பட்டுள்ளது.

அரசாங்க அதிபர்கள் ஏஜென்ஸி அடிப்படையில் செய்த வேலைகளும் அதிகாரங்களும் இந்த செயலகங்களின் கீழ் கொண்டுவரப்படவுள்ளது. (சி)

# இலங்கை முழுவதும் 60 எய்ட்ஸ் நோயாளர்

(கொழும்பு)
இலங்கையில் 60 பேர் முழுமையாக எயிட்ஸ் நோயினால் பீடிக்கப்பட்டுள்ளார்கள் என்று அமெரிக்க நிறுவனம் ஒன்றின் வைத்திய அறிக்கை தெரிவித்துள்ளது.

இந்த 60 பேருக்கும், ஆபத்தான எயிட்ஸ் கிருமிகள் இருக்கின்றனவாம். மற்றும் ஆயிரம் பேருக்குமேல் எயிட்ஸ் நோய் பீடித்திருக்கும் அறிகுறிகள் காணப்படுகின்றன. பெரும்பாலும் இளம் வயதினரே இந்த நோய்க்குட்பட்டுள்ளார்கள் என்றும், அந்த அறிக்கை மேலும் தெரிவிக்கின்றது. (வி-சி)

# தமிழக அமைச்சர்களை வழிமறித்த பெண்கள்

(சென்னை)
தமிழகத்தில் ஆளும் அ. தி. மு. கழக அமைச்சர்கள் இருவர் பயணம் செய்த கார்களை தமிழக பெண்களால்வழிமறிக்கப்பட்டு மறியல் போராட்டம் நடாத்தப்பட்டுள்ளது.

சேலம் சின்னத்திருப்பதியில்இடம் பெற்ற இம்மறியல் போராட்டத்தின் போது கல்வி அமைச்சர் அரங்கநாயகமும், மாநில வீட்டு வசதி அமைச்சர் செல்லகணபதி ஆகியோரே பெண்களால் வழிமறிக்கப்பட்டவர்களாவர்.

இருவரும் வாகனங்களை விட்டு வெளிவர முடியாதவாறு பெண்கள் காரைசுற்றி ஆக்ரோஷமாக கோஷமிட்டனராம்.

ஸ்தலத்திற்கு உடன் விரைந்த பொலிஸார் நிலைமையை கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தனராம்.

அரிசி விலையை குறைக்குமாறும், தேர்தல் காலத்தில் கூறப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறும் கோரியே மறியல் போராட்டம் நடாத்தப்பட்டதாம். (க)

### 'லக்திவ' பத்திரிகை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
டிக்கையிலும் ஈடுபட்ட பத்திரிகையாளர்கள், பின்பொரளை பொலிஸ் நிலையம் சென்று படப்பிடிப்பாளரை விடுவிக்குமாறு கேட்டபோது லக்திவ ஆசிரியர் மகேந்திர ஜயசுந்தர பொலிசாரால் கைதுசெய்யப்பட்டார். (க-இ)

### ஐரோப்பிய நாடுகளில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
திட்டங்களில் மாற்றம் ஏற்படுத்தப்படவேண்டும் எனவும் பிறநாடுகளிலிருந்து இடம் பெயரக்கூடியவர்களுக்கு அதிக உரிமைகள் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும் என்பன போன்ற பல முக்கிய விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இலங்கையட்பட பல ஆசிய நாட்டவர்கள் ஐரோப்பிய நாடுகளுக்கு அகதிகளாக பெருமளவில் செல்வதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-சி)

### கிளாலி படுகொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
கிளாலிக் கடலில் பயணம் செய்த அப்பாவிப் பயணிகளை கடற்படையினர் கண்மூடித்தனமாக சுட்டும் வெட்டியும் படுகொலை செய்துள்ளதை வன்மையாக கண்டித்துள்ள மேற்படிமனித உரிமை அமைப்பு இதற்காக, அரசு சார்பற்ற நீதி விசாரணை ஒன்றை நடாத்தக் கோரி அரசுக்கு கடந்த வாரம் அழைப்பு விடுத்திருந்தது.

எனினும் இது குறித்து இலங்கை அரசு இன்னமும் பதிலளிக்காது தொடர்ந்தும் மௌனம் சாதிப்பதாக பி. பி. ஸி. நேற்றிரவு கூறியது.

இப்படுகொலைகள் குறித்து அரசு சார்பற்ற விசாரணை ஒன்றை நடாத்தினால் அது அரசுக்கு எதிராகவே தீர்ப்பு அளிக்கும் என்ற அச்சமே இதற்குக் காரணமாய் இருக்குமெனவும், இதனால் அரசு சார்பற்ற விசாரணைக் கோரிக்கை நிராகரிக்கப்படலாம் எனவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (சி)

### பரவலாக மழை

(யாழ்ப்பாணம்)
நீண்ட இடைவெளிக்குப் பின்னர் யாழ். குடாநாட்டின் பல இடங்களில் நேற்று மழை பெய்துள்ளது. சாவகச்சேரி, மானிப்பாய் பகுதிகளில் கடும்மழை பெய்துள்ளது.

அத்துடன் குடாப்பகுதியில் வெப்பமும் ஆரம்பித்துவிட்டதால் புழுக்கமும் வியர்வையும் அதிகரித்துள்ளது. (56-சி)

கிரிக்கெட்

# இந்தியா—591 இங்--108-3

(புதுடில்லி)
இந்தியாவுக்கும் - இங்கிலாந்துக்குமிடையில் பம்பாயில் நடைபெறும் 3வது டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில், நேற்றைய 4ம் நாள் ஆட்டம் முடிவடையும்போது இங்கிலாந்து தனது 2வது இன்னிங்ஸில் 3 விக்கெட்டுகள் நஷ்டத்துக்கு 108 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. இங்கிலாந்து முதல் இன்னிங்ஸில் மொத்தம் 347 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

இந்தியா நேற்று தேனீர் இடைவேளைக்கு முன்பாகவே தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 591 ஓட்டங்களைப் பெற்றது. வினோத் கம்பிளே சிறப்பாகவும், வேகமாகவும் துடுப்பெடுத்தாடி 224 ஓட்டங்களைப்பெற்றது நேற்றைய ஆட்டத்தில் சிறப்பம்சமாகும். (வி)

### இனப் போரால்

(1 ம் பக்கத் தொடர்ச்சி)
பயன்படுத்தப்படும் என்றும் மேற்படி நிறுவன அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி-சி)

### புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
ளாக கடும் மோதல்கள் நடைபெற்று வருவதாக கூறிய அந்த அதிகாரி இம் மோதல்களில் ஏற்பட்ட சேத விபரங்கள் பற்றி ஏதும் கூறவில்லை. (வி-சி)

### கிழக்கில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)
படையும் தாக்குதலை நடத்தி வருவதாகவும், திருமலையில் பல இடங்களிலும் விமானத் தாக்குதல் இடம் பெற்றதாகவும் இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (க-இ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் நிறுவனத்தாரால், யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Number B/10336/B